අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/05/02/01

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2023.12. 07

சுற்றறிக்கை இலக்கம்:- 45/2023

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல பிரிவுகளுக்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்கள்
சகல பாடசாலை அதிபர்கள்

**க.பொ.த.(உ.த.) பிரிவில் கல்விபயிலும் மாணவர்களுக்கு சனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் 2022(2023)**

2022(2023) க.பொ.த.(சா.த.) பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றி அப்பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த.(உ.த.) கற்பதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு இவ்வருடமும் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு சனாதிபதி நிதியம் திட்டமிட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் நாடளாவிய ரீதியில் அனைத்து கல்வி வலயங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் இதன் கீழ் ஒரு கல்வி வலயத்திற்கு உரித்தாகும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை 50 ஆகும். இதற்குரிய தகைமைகளைப் பெறும் மாணவர்களுக்கு க.பொ.த.(உ.த.) பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதத்திற்கு ரூ. 6,000/- வீதம் ஆகக்கூடியது 24 மாதங்களுக்கு மாணவ உதவி தொகை வழங்கப்படும்.

1 **புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகுதிகள்**

1.1 **2022(2023) ஆம் ஆண்டில் க.பொ.த.(சா.த.) பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றி,** அப்பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த.(உ.த.) கற்பதற்குரிய தகைமைகளைப் பெற்றிருத்தல்.

1.2 அரச பாடசாலைகள் அல்லது கட்டணம் அறவிடப்படாத தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவனாக/மாணவியாக இருத்தல் வேண்டும்.

1.3 விண்ணப்பதாரரின் குடும்ப மாத வருமானம் ரூ.100,000/- வினை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

2 **விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல்.**

2.1 2022(2023) ஆம் ஆண்டில் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சித்தியடைந்த தமது பாடசாலையின் அனைத்து மாணவர்களுக்கும் அப்பாடசாலையின் அதிபர்களால் இந்த புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் பற்றி அறிவுறுத்தப்பட வேண்டும்.

2.2 இந்த புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பம் **(இணைப்பு 01)** மற்றும் அதற்குரிய அறிவுறுத்தல், பாடசாலை அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்துவதற்கு அதிபர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

2.3 இவை தொடர்பான மேலதிக விபரம் மற்றும் விண்ணப்பப்படிவங்களை சனாதிபதி அலுவலகத்தின் www.presidentsoffice.gov.lk, சனாதிபதி நிதியத்தின் www.presidentsfund.gov.lk , சனாதிபதி ஊடக பிரிவின் www.pmd.gov.lk மற்றும் கல்வி அமைச்சின் www.moe.gov.lk ஆகிய இணையத்தளங்களில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister — +94112784832, +94112784825, minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary — +94112784811, +94112785162, secretary.education@moe.gov.lk

2.4 மேற்குறிப்பிட்ட 01 ஆம் இலக்கத்திலுள்ள அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மற்றும் புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்க விரும்பிய மாணவர்கள் உரிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவத்திற்கேற்ப (**இணைப்பு 01**) தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **க.பொ.த.(சா.த.) பரீட்சைக்கு தோற்றிய பாடசாலை அதிபரிடம் மாத்திரம் குறிப்பிட்ட திகதி அல்லது அதற்கு முன்பதாக கையளிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.**

2.5 குடும்ப மாத வருமானத்தை கிராம அலுவலரிடம் உறுதிப்படுத்தி பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.(வருமான அறிக்கையினை பெறத்தேவையில்லை)

2.6 உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் உரிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகளைக் கொண்டிராத மற்றும் குறைபாடுகளைக்கொண்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## 3 தெரிவு செய்யப்படும் முறை

### 3.1 பாடசாலை மட்டம்

3.1.1 இச் சுற்றறிக்கையில் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல் மற்றும் மதிப்பெண் நடைமுறைகளின் அடிப்படையில் பாடசாலை தெரிவுக்குழுவின் மூலம் பாடசாலைக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் மதிப்பெண்களை பரிசீலித்தல் வேண்டும். பாடசாலை தெரிவுக்குழுவிற்கு அதிபர் அல்லது பெயர் குறிப்பிடப்படும் பிரதி/ உதவி அதிபர்களின் தலைமைத்துவத்தினைக் கொண்ட இரண்டு சிரேஷ்ட ஆசிரியர்களை நியமித்துக்கொள்ள முடியும் என்பதுடன், விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுக்குழுக்களை நியமித்துக்கொள்ளமுடியும்.

3.1.2 குறிப்பிட்ட திகதியில் மாணவர்கள் கையளிக்கும் விண்ணப்பங்கள் மற்றும் பாடசாலை அதிபர் அல்லது பிரதி/ உதவி அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் **உரிய மாணவர்கள் க.பொ.த.(சா.த.) பரீட்சைக்கு தோற்றிய பாடசாலைக்குரிய கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் உரிய திகதிக்கு முன்பதாக அனுப்புதல் வேண்டும்.**

### 3.2 வலய மட்டம்

3.2.1 இந்த புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தினை ஒருங்கிணைப்பதற்கு பதவி நிலை அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உரிய வலயத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களுக்கேற்ப வலயத்திற்குரிய 50 புலமைப்பரிசில்களுக்கான மாணவர்களைத் தெரிவுக்குழு தெரிவு செய்தல் வேண்டும்.

3.2.2 அதற்காக வலயக் கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் உரிய வலயக் கல்வி அலுவலகத்தின் சிரேஷ்ட பதவி நிலை அலுவலரின் தலைமையின் கீழ் மேலும் ஒரு பதவிநிலை அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் பதவிநிலை அலுவலர் உள்ளடங்களாக மூவர் அடங்கிய வலய மட்டத்தின் தெரிவுக்குழு நியமிக்கப்படுதல் வேண்டும்.

3.2.3 கணிசமான எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் ஒன்றுக்கு அதிகமான தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்படமுடியும்.

3.2.4 **தெரிவுக்குழு மூலம் புலமைப்பரிசிற்குரியவர்களை தெரிவுசெய்வதற்கு இச்சுற்றறிக்கையின் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல் மற்றும் புள்ளியிடும் முறைகளை அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும்.**

3.2.5
- உதவி தொகை வழங்க பரிந்துரைக்கப்பட்ட மாணவர்களின் விபரங்கள், **படிவம் 01 இன் படி பெற்ற மதிப்பெண்களின் வரிசையில் மாணவர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்படுதல் வேண்டும்.**

- **அதே நேரத்தில் தேர்தெடுக்கப்பட்ட உதவித்தொகை பெறுபவர்களின் வங்கிக் கணக்கு விபரம் அடங்கிய ஆவணம் (படிவம் 02 இன்படி ) தயாரிக்கப்பட வேண்டும். (இதனுடன் புலமைப்பரிசில் பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்களில் காணப்படும் பயன்பாட்டிலுள்ள வங்கிக் கணக்கின் நகல் மற்றும் தேசிய அடையாள அட்டையின் நகல் ஆகியவற்றையும் பெற்று படிவம் 02 உடன் சமர்ப்பித்தல் வேண்டும்).**

**(உரிய ஒவ்வொரு படிவத்திலும் புலமைப்பரிசில் பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் மாற்றங்கள் இல்லாது வரிசை ஒழுங்கில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், தே.அ.அ. மற்றும் வங்கிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் விண்ணப்பத்திலுள்ள பெயர்களுக்குச் சமனாக இருத்தல் வேண்டும்.)**

3.2.6 தேர்ந்தெடுக்கப்படாத ஏனைய விண்ணப்பதாரர்களின் விபரங்கள் வேறாக பட்டியலிடப்பட்டு (பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்கிற்கேற்ப) வலய அலுவலகக் கோவையில் கோவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

3.2.7 தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசிற்குரியவர்களின் பட்டியல் வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தி மென் மற்றும் வன் பிரதிகளை மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும். **வலய ஒருங்கிணைப்பு அலுவலரினால் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை கோவைப்படுத்தி வைத்தல் வேண்டும்.**

## 3.3 மாகாண மட்டம்

3.3.1 மாகாண மட்டத்தில் இந்த புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கிணைப்பதற்காக பதவிநிலை அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3.2 வலய மட்டத்தில் அனுப்பப்பட்ட ஆவணங்களுக்கு ஏற்ப ஒரு வலயத்திற்கு 50 புலமைப்பரிசில்கள் என்றவாறு மாகாண மட்டத்திலான ஒட்டுமொத்த பட்டியலை தயாரிக்க வேண்டும் என்பதுடன், பட்டியலிட்டு சமர்ப்பிக்கப்படும் போது **வலயத்திற்குரிய உச்ச புலமைப்பரிசில் எண்ணிக்கையினை விஞ்சுதல் கூடாது.**

3.3.3 மாகாண மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் பெயர்ப் பட்டியல் (படிவம் 01) மற்றும் வங்கிக் கணக்கு விபரங்கள் உள்ளடங்கிய பட்டியல் (படிவம் 02) ஆகியன மாகாண கல்விப் பணிப்பாளரால் பரிந்துரைக்கப்பட்டு கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

3.3.4 உரிய பெயர்ப் பட்டியல்களின் மென் பிரதி சனாதிபதி நிதியத்தின் pfschol@presidentsoffice.lk மற்றும் கல்வி அமைச்சின் directorschoolactivities@yahoo.com ஆகிய மின்னஞ்சல்களுக்கு உரிய திகதியில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 3.4 தேசிய மட்டம்

3.4.1 மாகாண கல்விப் பணிப்பாளரால் பரிந்துரைக்கப்பட்டு கல்வி அமைச்சின் செயலாளரிடம் அனுப்பப்படுகின்ற தெரிவுசெய்யப்பட்ட மாணவர் பெயர்ப் பட்டியல் (படிவம் 01) மற்றும் வங்கிக் கணக்கு விபரங்கள் உள்ளடங்கிய பட்டியல் (படிவம் 02) ஆகியன குறிப்பிட்ட கால எல்லைக்குள் கல்வி அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் செயலாளர் , சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

3.4.2 அவ்வாறு அனுப்பப்படுகின்ற முன்மொழியப்பட்ட புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு மாத்திரம் இந்த புலமைபரிசில்கள் வழங்கப்படும்.

## 4 அளவுகோல் மற்றும் மதிப்பெண் நடைமுறை

விண்ணப்பதாரியொருவருக்கு வழங்கக்கூடிய உச்ச மதிப்பெண்களின் எண்ணிக்கை 100 ஆகும்.

### 4.1 குடும்பங்கள் பற்றிய தகவல்கள் (விண்ணப்பப்படிவத்தில் 01 ஆம் இலக்கம்)

| | | |
|---|---|---|
| 4.1.1 | குடும்பத்தின் 21 வயதிற்குட்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் இருத்தல் | - 04 புள்ளி |
| 4.1.2 | பெற்றோர் இருவரையும் இழந்திருத்தல் | - 06 புள்ளி |
| 4.1.3 | பெற்றோர் இல்லாது பாதுகாவலருடன் இருத்தல் **(அவ்வாறாயின், சட்டபூர்வ பாதுகாவலர் என்பதனை நிரூபிக்கும் ஆவணங்களின் நகல்கள் இணைக்கப்படுதல் வேண்டும்.)** | - 03 புள்ளி |
| 4.1.4 | பெற்றோரில் ஒருவரை இழந்திருத்தல் | - 02 புள்ளி |
| 4.1.5 | மாணவன்/மாணவி முழுமையாக அங்கவீனமுற்று இருத்தல் (பகுதியளவில் அங்கவீனமுற்றிருந்தால் 05 புள்ளிகள் மாத்திரம் வழங்கவும்) | - 10 புள்ளி |

(ஆகக் கூடிய புள்ளிகள் 25)

குறிப்பு:- பெற்றோரில் தங்கிவாழும் 21 வயதிற்குற்பட்ட திருமணமாகாதவர்கள் பிள்ளைகளாக கருதப்படுகிறார்கள். உடல் குறைபாடுகள் தொடர்பில் அரச மருத்துவ உத்தியோகத்தர் சான்றளித்தல் வேண்டும்.

### 4.2 க.பொ.த.(சா.த.) பரீட்சைப் பெறுபேறுகள் (விண்ணப்பப்படிவத்தில் 02 ஆம் இலக்கம்)

4.2.1 க.பொ.த.(சா.த.) பரீட்சையின் கட்டாய பாடங்களுக்கு

| | | |
|---|---|---|
| விசேட சித்தி | (A) | - 08 புள்ளி |
| அதி திறமைச் சித்தி | (B) | - 06 புள்ளி |
| திறமைச் சித்தி | (C) | - 04 புள்ளி |
| சாதாரண சித்தி | (S) | - 02 புள்ளி |

4.2.2 **தொகுதிப் பாடங்கள் தொடர்பில் ஒரு பாடத்திற்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 02 பாடங்களுக்கு இரண்டு புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.**

(ஆகக் கூடிய புள்ளிகள் 50 )

### 4.3 விளையாட்டு (விண்ணப்பப்படிவத்தில் 03 ஆம் இலக்கம்)

கரப்பந்தாட்டம்/ வலைப்பந்தாட்டம்/ கால்பந்தாட்டம்/ கூடைப்பந்தாட்டம்/ கிரிக்கெட்/ எல்லே/ பட்மிட்டன்/ கபடி/ றகர்/ ஹொக்கி/ மெய்வல்லுநர் விளையாட்டு/ செஸ்/ கரம்/ டென்னிஸ்/ நீச்சல்/ ஜிம்னாஸ்டிக்/ கராத்தே/ மேசைப்பந்தாட்டம் அல்லது வேறு

| | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| • முதலாமிடம் | 05 | 07 | 09 |
| • இரண்டாமிடம் | 04 | 05 | 08 |
| • மூன்றாமிடம் | 02 | 03 | 06 |
| • தலைமைத்துவம் | 01 | 01 | 01 |

(ஆகக் கூடிய புள்ளிகள் 10)

4.4 **அழகியல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் (விண்ணப்பப்படிவத்தில் 04 ஆம் இலக்கம்)**

- தேசிய மொழிகள் மற்றும் இலக்கியப் போட்டிகள்/ விவாதங்கள்/ பேச்சு/ அறிவிப்பாளர்/ அறிவுப்போட்டி/ ஓவியம்/ நடனம்/ இசைக்கருவி இசைத்தல்/ பாடல்/ மேடை நாடகம்/ விடய சாதனைகள்/மாணவ படையணி/ சாரணர்/ முதலுதவி/ சூழலியல் சார்ந்தவை/ வேறு

| | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| • முதலாமிடம் | 05 | 07 | 09 |
| • இரண்டாமிடம் | 04 | 05 | 08 |
| • மூன்றாமிடம் | 02 | 03 | 06 |
| • தலைமைத்துவம் | 01 | 01 | 01 |

(ஆகக் கூடிய புள்ளிகள் 10)

4.5 **மாணவர் தலைமைத்துவம் (விண்ணப்பப்படிவத்தில் 05 ஆம் இலக்கம்)**

பாடசாலை முதன்மை மாணவ தலைவர் / - 05 புள்ளி
உப முதன்மை மாணவ தலைவர்
மாணவ தலைவர் ( சிரேஷ்ட/கனிஷ்ட) - 04 புள்ளி
வகுப்புத் தலைவர் - 02 புள்ளி

(ஆகக் கூடிய புள்ளிகள் 05)

**கவனிக்கவும் :-**

- **மேற்குறிப்பிட்ட 4.3 மற்றும் 4.4 ஆகியவற்றில், ஒரு மாணவனுக்கு/மாணவிக்கு ஒரே இணைப்பாடவிதான செயற்பாட்டிற்காக தேசிய, மாகாண மற்றும் வலயம் ஆகிய அனைத்து மட்டங்களிற்கும் புள்ளிகள் வழங்கப்படலாகாது. புள்ளிகள் வழங்கப்படும் போது மேற்குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி மட்டங்கள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.**
- **மேற்குறிப்பிட்ட 4.5 இல் புள்ளிகள் வழங்கும் போது ஆகக்கூடிய புள்ளி மட்டங்கள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.**

5 **புலமைப்பரிசில் வழங்குதல்**

5.1 இரண்டாம் நிலைக் கல்விக்காக ஏற்புடைய ஆண்டில் தரம் 12 இல் சேர்ந்து க.பொ.த. (உயர்தர) கல்வியைத் தொடரும் மாணவர்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் வரை இரண்டு ஆண்டு காலத்திற்குள் மாதம் ஒன்றுக்கு ரூ.6,000/- ரூபாய் வீதம் 24 புலமைப்பரிசில் தவணைகள் வழங்கப்படும். புலமைப்பரிசில் பெறுபவர்கள் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் ஏற்புடைய பணத்தொகை புலமைப்பரிசில் பெறுபவர்களின் பெயரில் உள்ள வங்கி கணக்கில் மாத்திரம் நேரடியாக வைப்புச் செய்யப்படும்.

5.2 குறித்த புலமைப்பரிசில் பெறுபவர் ஏதேனும் ஒரு காரணத்தால் தான் கல்வி கற்கும் பாடசாலையில் இருந்து விலகி வேறு ஒரு பாடசாலையில் சேர்வாராயின் அதனை அத்தாட்சிப்படுத்தும் கடிதம் ஒன்று அதிபரால் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்படல் வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளரால் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குரிய பிரதியுடன் சனாதிபதி நிதியத்துக்கு அது தொடர்பாக துரிதமாக அறிவிக்கப்படல் வேண்டும்.

குறித்த புலமைப்பரிசில் பெறுபவராலும் தான் பாடசாலையை விட்டு விலகியதாக மற்றும் புதிதாக சேர்ந்த பாடசாலையின் பெயர் குறிப்பிடப்பட்ட கடிதம் ஒன்றைத் தான் தற்போது கல்வி கற்கும் பாடசாலையின் அதிபர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

## 6 புலமைப்பரிசில்களை கண்காணித்தல்

6.1 வலய மட்டத்தில் புலமைப்பரிசில்களை கண்காணித்தல், அவர்கள் கல்வி கற்கும் பாடசாலை உரித்தாகும் வலயக் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்கான ஒருங்கிணைப்பு அலுவலரிடம் ஏற்புடைய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

6.2 மாகாண மட்டத்தில் புலமைப்பரிசில் பெறுநர்களை கண்காணித்தல், உரிய மாகாண கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கான பொறுப்பு ஒருங்கிணைப்பு அலுவலரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

6.3 தேசிய மட்டத்தில் புலமைப்பரிசில் பெறுநர்களை கண்காணித்தல், கல்வி அமைச்சு மற்றும் சனாதிபதி நிதியம் மூலம் மேற்கொள்ளப்படும்.

## 7 புலமைப்பரிசில்களை இரத்துச் செய்தல்.

7.1 பின்வரும் காரணங்களினால் இப்புலமைப்பரிசில் பெறுநர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களை இரத்துச் செய்யும் அதிகாரம் சனாதிபதி நிதியத்துக்கு உண்டு.

I. புலமைப்பரிசில் பெறுநர் ஒழுக்கத்துக்கு முரணாக செயற்பட்டமையால் தண்டனை விதிக்கப்படல்.
II. தொடர்ச்சியாக பாடசாலைக்கு சமூகமளிக்காமை.
III. தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கைகளில் இருந்து நீங்குதல்.
IV. க.பொ.த.(உயர்தர) கல்வியை பூர்த்தி செய்யாது பாடசாலையை விட்டு விலகுதல்.
V. கட்டணம் செலுத்தும் /சர்வதேச பாடசாலை ஒன்றில் சேர்தல்.

## 8 காலச் சட்டகம்

| | பணி | காலம் (ஏற்புடைய பணியை நிறைவு செய்ய வேண்டிய இறுதித் திகதி) |
|---|---|---|
| 8.1 | விண்ணப்பம் கோரல் மற்றும் ஒப்படைத்தல் | 2023.12.22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |
| 8.2 | அதிபர் மூலம் வலயக் கல்வி அலுவலகத்துக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் | 2024.01.08 ஆம் திகதி அல்லது அதற்கு |

| | | |
|---|---|---|
| | | முன்னர் |
| 8.3 | வலயக் கல்விப் பணிப்பாளர் ஏற்புடைய நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி புலமைப்பரிசில் பெறுநர்களை தெரிவுசெய்தல் மற்றும் ஏற்புடைய ஆவணங்களை மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்புதல். | 2024.01.29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |
| 8.4 | மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஏற்புடைய ஆவணங்களைப் பரிசோதித்து இறுதிப் பெயர்ப்பட்டியல்களை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்புதல். | 2024.02.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |
| 8.5 | கல்வி அமைச்சின் செயலாளர் அந்த ஆவணங்களை சனாதிபதி நிதியத்துக்கு அனுப்புதல் | 2024.02.12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் |

இந்த சுற்றறிக்கை தொடர்பில் பிரச்சினைகள் ஏதும் இருப்பின் அது தொடர்பான கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

எம். என். ரணசிங்க
**செயலாளர்,**
கல்வி அமைச்சு

பிரதி:- 01.சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி அலுவலகம்
02. செயலாளர், சனாதிபதி நிதியம்
} தகவலுக்காக

**சனாதிபதி நிதியம்**

**அறிவுறுத்தல் பத்திரம்**

**க.பொ.த.(உ.த.) கற்பதற்காக சனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்களைக் கோருதல்**

**தகைமைகள்**

- விண்ணப்பதாரரின் குடும்ப மாத வருமானம் ரூ.100,000/- வினை விஞ்சாதிருத்தல் வேண்டும்.
- அரச பாடசாலைகள் அல்லது கட்டணமற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவனாக/மாணவியாக இருத்தல் வேண்டும்.
- 2022(2023) ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க.பொ.த.(சா.த.) பரீட்சையில் முதற்தடைவையாகத் தோற்றி 2025 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ.த.) கற்பதற்கான முழுத் தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்தல்**

- விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 01 முதல் 06 வரையான பகுதி விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.
- எப்பொழுதும் உண்மையான தகவல்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.
- குறுந்தகவல் அனுப்பக்கூடிய தொலைபேசி இலக்கமொன்றைக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களிடம் அவ்வாறான தொலைபேசி இலக்கமொன்று இல்லையாயின் அவர்களின் இணக்கப்பாட்டுடன் நெருங்கிய குடும்ப உறவினர் ஒருவரின்/பாடசாலை ஆசிரியரின்/அதிபரின் தொலைபேசி இலக்கத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- உரிய வினாக்களுக்குரிய புள்ளிகள் வழங்குதல் விண்ணப்பதாரியினாலேயே மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன் உரிய பெறுபேறுகள் உண்மையானவை என்று அதிபர் சான்றளித்தல் வேண்டும்.
- குடும்ப வருமானம் தொடர்பாக தாம் வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலரின் சான்றிதழ், பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் (வருமான விபரத்தினைப் பெற்றுக்கொள்ளல் அவசியமன்று) **பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தினை நீங்கள் க.பொ.த.(சா.த.) கற்ற பாடசாலை அதிபரிடம் மாத்திரம் ஒப்படைத்தல் வேண்டும்.**
- அதிபரினால் மாத்திரம் உரிய விண்ணப்பங்கள் பட்டியலிடப்பட்டு பாடசாலைக்குரிய வலயக் கல்விக் காரியாலயத்திற்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பங்களை சனாதிபதி அலுவலகத்திற்கு அல்லது சனாதிபதி நிதியத்திற்கு கையளித்தல் அல்லது தபாலில் அனுப்புதல் மேற்கொள்ளப்படலாகாது.

**01. மதிப்பெண் வழங்கும் முறை**

| | | |
|---|---|---|
| 01.01. | குடும்பத்தின் 21 வயதிற்குட்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் இருத்தல் | -04 புள்ளி |
| 01.02. | பெற்றோர் இருவரையும் இழந்திருத்தல் | -06 புள்ளி |
| 01.03. | பெற்றோர் இல்லாது பாதுகாவலருடன் இருத்தல் | -03 புள்ளி |
| 01.04. | பெற்றோரில் ஒருவரை இழந்திருத்தல் | -02 புள்ளி |
| 01.05. | மாணவன்/மாணவி முழுமையாக அங்கவீனமுற்று இருத்தல் | -10 புள்ளி |

(பகுதியளவில் அங்கவீனமுற்றிருந்தால் 05 புள்ளிகள் மாத்திரம் வழங்கவும்)

(ஆகக் கூடிய புள்ளிகள் 25)

குறிப்பு:- பெற்றோரில் தங்கிவாழும் 21 வயதிற்குற்பட்ட திருமணமாகாதவர்கள் பிள்ளைகளாக கருதப்படுகிறார்கள். உடல் குறைபாடுகள் தொடர்பில் அரச மருத்துவ உத்தியோகத்தர் சான்றளித்தல் வேண்டும்.

**02. க.பொ.த.(சா.த.) பரீட்சையின் கட்டாய பாடங்களுக்கு**

| | | |
|---|---|---|
| அதி விசேட சித்தி | (A) | - 08 புள்ளி |
| விசேட சித்தி | (B) | - 06 புள்ளி |
| திறமைச் சித்தி | (C) | - 04 புள்ளி |
| சாதாரண சித்தி | (S) | - 02 புள்ளி |

தொகுதிப் பாடங்கள் தொடர்பில் ஒரு பாடத்திற்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 02 பாடங்களுக்கு இரண்டு புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆகக் கூடிய புள்ளிகள் 50 )

**03. விளையாட்டு**

கரப்பந்தாட்டம்/ வலைப்பந்தாட்டம்/ கால்பந்தாட்டம்/ கூடைப்பந்தாட்டம்/ கிரிக்கெட்/ எல்லே/ பட்மிட்டன்/ கபடி/ றகர்/ ஹொக்கி/ மெய்வல்லுநர் விளையாட்டு/ செஸ்/ கரம்/ டென்னிஸ்/ நீச்சல்/ ஜிம்னாஸ்டிக்/ கராத்தே/ மேசைப்பந்தாட்டம் அல்லது வேறு

| | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| • முதலாமிடம் | 05 | 07 | 09 |
| • இரண்டாமிடம் | 04 | 05 | 08 |
| • மூன்றாமிடம் | 02 | 03 | 06 |
| • தலைமைத்துவம் | 01 | 01 | 01 |

(ஆகக் கூடிய புள்ளிகள் 10)

**04. அழகியல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

தேசிய மொழிகள் மற்றும் இலக்கியப் போட்டிகள்/ விவாதங்கள்/ பேச்சு/ அறிவிப்பாளர்/ அறிவுப்போட்டி/ ஓவியம்/ நடனம்/ இசைக்கருவி இசைத்தல்/ பாடல்/ மேடை நாடகம்/ விடய சாதனைகள்/மாணவ படையணி/ சாரணர்/ முதலுதவி/ சூழலியல் சார்ந்தவை/ வேறு

| | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| • முதலாமிடம் | 05 | 07 | 09 |
| • இரண்டாமிடம் | 04 | 05 | 08 |
| • மூன்றாமிடம் | 02 | 03 | 06 |
| • தலைமைத்துவம் | 01 | 01 | 01 |

(ஆகக் கூடிய புள்ளிகள் 10)

**05.மாணவர் தலைமைத்துவம்**

| | |
|---|---|
| பாடசாலை முதன்மை மாணவ தலைவர் / உப முதன்மை மாணவ தலைவர் | - 05 புள்ளி |
| மாணவ தலைவர் ( சிரேஷ்ட/கனிஷ்ட) | - 04 புள்ளி |
| வகுப்புத் தலைவர் | - 02 புள்ளி |

(ஆகக் கூடிய புள்ளிகள் 05)

**கவனிக்கவும் :-**

• மேலே உள்ள 03 மற்றும் 04 இல், ஒரே இணைப்பாடவிதான செயற்பாட்டிற்காக தேசிய, மாகாண மற்றும் வலயம் ஆகிய அனைத்து மட்டங்களிற்கும் புள்ளிகள் வழங்கப்படலாகாது. புள்ளிகள் வழங்கப்படும் போது மேற்குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி மட்டங்கள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

• மேற்குறிப்பிட்ட 05 இல் புள்ளிகள் வழங்கும் போது ஆகக்கூடிய புள்ளி மட்டங்கள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

**இணைப்பு 01**

**சனாதிபதி நிதியம்**

அலுவலக உபயோகத்திற்கு :- [ ]

**2022 (2023) ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க.பொ.த.(சா.த.) பரீட்சைக்கு முதற் தடவையாகத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்து 2025 ஆண்டில் க.பொ.த.(உ.த.) கற்கவுள்ள மாணவர்களுக்கு சனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள் – விண்ணப்பப்படிவம்**

(விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் அறிவுறுத்தல் பத்திரத்தைத் தயவுடன் பார்க்கவும்.)

மாகாணம்:- ...................... மாவட்டம்:- ........................ கல்வி வலயம்:- ........................

**பிரிவு I - விண்ணப்பதாரியின் தனிப்பட்ட விபரங்கள்**

முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழ்) :- ..........................................................................................

முதலெழுத்துக்கள் குறிக்கின்ற பெயர் (தமிழ்) :- ..........................................................................................

முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலம்) :- ..........................................................................................

க.பொ.த.(சா.த.)பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :- (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)

பரீட்சை சுட்டெண் :- ..........................................................................................

2022 (2023) ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியது முதற் தடவையா? :- (ஆம்/இல்லை)

க.பொ.த.(சா.த.)பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை :- ..........................................................................................

க.பொ.த.(உ.த.) கற்பதற்கு எதிர்பார்க்கும் பாடசாலை :- ..........................................................................................

பிறந்த திகதி :- [ ][ ][ ][ ] [ ][ ] [ ][ ] (YYYY –MM –DD)

தேசிய அடையாள அட்டை இலக்கம் :- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

தொலைபேசி இலக்கம் (குறுந்தகவல் அனுப்பக்கூடிய) :- [0][7][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

தொலைபேசி இலக்கம் (தொடர்புகொள்ளக்கூடிய) :- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

தனிப்பட்ட முகவரி (தமிழ்) :- ..........................................................................................
..........................................................................................

தனிப்பட்ட முகவரி (ஆங்கிலம்) :- ..........................................................................................
..........................................................................................

---

**பிரிவு II** 01. குடும்பம் தொடர்பான தகவல்கள்

| | | புள்ளி |
|---|---|---|
| 01.01 | பெற்றோரில் தங்கிவாழும் 21 வயதுக்குட்பட்ட குடும்பத்தின் ஏனைய உடன்பிறப்புகளின் எண்ணிக்கை (...........) :- | |
| 01.02 | உங்களது தாய் தந்தை இருவரும் உயிருடன் இருக்கின்றார்களா? ஆம்/இல்லை :- | |
| 01.03 | பெற்றோர் அல்லாத பாதுகாவலரின் பராமரிப்பில் உள்ளீர்களா? ஆம்/இல்லை (அவ்வாறாயின், சட்டபூர்வ பாதுகாவலர் என்பதனை நிரூபிக்கும் ஆவணங்களின் நகல்கள் இணைக்கப்படுதல் வேண்டும்.) | |
| 01.04 | உங்களது தாய் அல்லது தந்தை ஆகிய இருவரில் ஒருவர் மாத்திரம் உயிருடன் இருக்கின்றாரா? .................. மாத்திரம் இருக்கின்றார். :- | |
| 01.05 | நீங்கள் உடல்ரீதியான குறைப்பாட்டிற்கு உள்ளாகி இருக்கின்றீர்களா? ஆம்/இல்லை அக்குறைபாடு என்ன? .................................................................... :- | |

பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள் :- [ ]
(ஆகக் கூடிய புள்ளிகள் 25 ஆகும்)

**சனாதிபதி நிதியம்**

02 கல்விப் பொதுத் தராதர(சா.த.)பரீட்சைப் பெறுபேறுகள்

| | பாடம் | | தரம் | புள்ளி |
|---|---|---|---|---|
| 02.01 | சமயம் | :- | ............... | |
| 02.02 | மொழி மற்றும் இலக்கியம் | :- | ............... | |
| 02.03 | ஆங்கில மொழி | :- | ............... | |
| 02.04 | கணிதம் | :- | ............... | |
| 02.05 | வரலாறு | :- | ............... | |
| 02.06 | விஞ்ஞானம் | :- | ............... | |
| 02.07 | முதலாவது தொகுதிப் பாடங்களுக்குரிய பாடம் (பாடம்...........................................) | :- | ............... | |
| 02.08 | இரண்டாவது தொகுதிப் பாடங்களுக்குரிய பாடம் (பாடம்…...........................) | :- | ............... | |
| 02.09 | மூன்றாவது தொகுதிப் பாடங்களுக்குரிய பாடம் (பாடம் ..........................................) | :- | ............... | |

பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள்
(ஆகக்கூடிய புள்ளிகள் 50 ஆகும்.)

03. **விளையாட்டு**

(உதாரணம்: கரப்பந்தாட்டம்/வலைப்பந்தாட்டம்/கால்பந்தாட்டம்/கூடைப்பந்தாட்டம்/கிரிக்கெட்/எல்லே / பட்மிட்டன்/கபடி/றகர்/ஹொக்கி/மெய்வல்லுநர் விளையாட்டு/ செஸ்/ கரம்/டென்னிஸ்/நீச்சல்/ஜிம்னாஸ்டிக் /கராத்தே/மேசைப்பந்தாட்டம் அல்லது வேறு

| விளை யாட்டு | வலய மட்டம் | | மாகாண மட்டம் | | தேசிய மட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | தலைமைத்துவம்/ பங்கேற்பு | | தலைமைத்துவம்/ பங்கேற்பு | | தலைமைத்துவம்/ பங்கேற்பு | |
| | 1வது இடம் | 2வது அல்லது 3வது இடம் | 1வது இடம் | 2வது அல்லது 3வது இடம் | 1வது இடம் | 2வது அல்லது 3வது இடம் |
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |

பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள்
(ஆகக்கூடிய புள்ளிகள் 10 ஆகும்.)

04 **அழகியல் அல்லது இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

(உதாரணம்- தேசிய மொழிகள் மற்றும் இலக்கியப் போட்டிகள்/ விவாதங்கள்/ பேச்சு/ அறிவிப்பாளர்/ அறிவுப்போட்டி/ இசைக்கருவி இசைத்தல்/ பாடல்/ ஓவியம்/ நடனம்/ மேடை நாடகம்/ சாரணர்/ மாணவ படையணி/ முதலுதவி/ சூழலியல் சார்ந்தவை/வேறு/ விடய சாதனைகள் அல்லது வேறு)

| செயற்பாடு | வலய மட்டம் | | மாகாண மட்டம் | | தேசிய மட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | தலைமைத்துவம்/ பங்கேற்பு | | தலைமைத்துவம்/ பங்கேற்பு | | தலைமைத்துவம்/ பங்கேற்பு | |
| | 1வது இடம் | 2வது அல்லது 3வது இடம் | 1வது இடம் | 2வது அல்லது 3வது இடம் | 1வது இடம் | 2வது அல்லது 3வது இடம் |
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |

பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள்
(ஆகக்கூடிய புள்ளிகள் 10 ஆகும்.)

05. **மாணவர் தலைமைத்துவம்**

| | | புள் ளி |
|---|---|---|
| 01 | பாடசாலை முதன்மை மாணவ தலைவர்<br>பாடசாலை உப முதன்மை மாணவ தலைவர் | |
| 02 | மாணவ தலைவர் ( சிரேஷ்ட/கனிஷ்ட) | |
| 03 | வகுப்புத் தலைவர் | |
| | பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள்<br>(ஆகக்கூடிய புள்ளிகள் 05 ஆகும்.) | |

---

06 மதிப்பெண்களின் சாராம்சம்

| | | |
|---|---|---|
| 01 | குடும்பம் தொடர்பான தகவல் | |
| 02 | க.பொ.த.(சா.த.) பரீட்சை | |
| 03 | இணைப்பாடவிதான செயற்பாடு -விளையாட்டு | |
| 04 | இணைப்பாடவிதான செயற்பாடு – (அழகியல் பாடங்கள் மற்றும் வேறு) | |
| 05 | மாணவர் தலைமைத்துவம் | |
| | பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள் | |

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவையும் சரியானவையென்று நான் உறுதிப்படுத்துகின்றேன். தேவைப்படும் சந்தர்ப்பத்தில் உரிய சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு இணங்குகின்றேன்.

திகதி : ........................ ……………………..
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**சனாதிபதி நிதியம்**

<u>**குடும்ப மாத வருமானம் தொடர்பான கூற்று**</u> **:-**

**(தாய்/ தந்தை/ பாதுகாவலரால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.)**

நான் ........................................................................................................ தொழில் புரிகின்றேன்./ தொழில் புரியவில்லை.
(என்ன தொழில் என்று)

எனது கணவர்/ மனைவி.................................................................... நிறுவனத்தில் பணியாற்றுகின்றார்./ பணியாற்றவில்லை. எமது குடும்பத்தின் மாத வருமானம் ரூ.: .................................. வாகும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

...........................................
தாய்/தந்தை/பாதுகாவலரின் கையொப்பம்

திகதி: ..................... பெயர் : ....................................

மேற்குறிப்பிட்ட வருமானம் பற்றிய தகவல் சரியானது என்று உறுதிப்படுத்துகின்றேன்.

...................................
கிராம அலுவலரின் கையொப்பம்
திகதி: ...................... (பதவி முத்திரை)

மேற்குறிப்பிட்ட வருமானம் பற்றிய தகவல் சரியானது என்று உறுதிப்படுத்துகின்றேன்.

..............................
பிரதேச செயலாளர்
திகதி : ..................... (பதவி முத்திரை)

---

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**

மேற்குறிப்பிட்ட 1-5 வரை வழங்கப்பட்ட மதிப்பெண்கள் சரியானவையென்றும், ஏனைய தனிப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன். எனவே ..............................................................மாணவனால்/மாணவியால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை பரிந்துரைசெய்து சமர்ப்பிக்கின்றேன்.

..............................
அதிபரின் கையொப்பம்
திகதி : ................... (பதவி முத்திரை)

---

**அலுவலக உபயோகத்திற்காக,**

வலய நேர்காணல் சபை உறுப்பினர்களின் விபரங்கள்

| | பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| 1. | ................................................ | ............................. | ......................... |
| 2. | ................................................ | ............................. | ......................... |
| 3. | ................................................ | ............................. | ......................... |

Format 1

## List of Scholars, Scholarships awarded by the President's Fund to the Students who have appeared and passed G.C.E. (O/L) Examination held in the year 2022(2023) and study for G.C.E. (A/L)

(As per the order of marks obtained by Students this format should be complete)

Province :
District :
Education zone:

| S/No | Name of the Student | Male/ Female | Ethnicity | Attended School sat for the G.E.C. (O/L) | Expected School for Studying for G.E.C. (A/L) | Personal address | obtained Marks |
|---|---|---|---|---|---|---|---|
| 01<br>02.<br>03.<br>04.<br>.<br>.<br>.<br>50. | | | | | | | |

| Names of Interview Panel Members | Post | Official address |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

Date :

I recommend the above selected student list.

Date :- ..................................  Signature and Seal::- ..........................................

(Provincial Director of Education))

**The following instructions should be considered when completing the Formats 01. :-**

I. **<u>Information should be presented as per the MS - Excel Sheet</u>**.

II. The names of the Colum of the names mention of the selected scholars should be completed with initials without a dot between the initials. only one space (Space 1) should be left.

**Ex- A B C Senanayake** √ **A.B.C. Senanayake** x

III. When mention the address, the most accurate should be mention .

IV. The members of the interview panel signed document should be send to the provincial education director for recommendation, and the provincial education director should recommend and submit the documents.

**Forms 02**

## List of names recommended for scholarships to be awarded to GCE (A/L) students by the President's Fund. (Based on their performance at the GCE (O/L) Examination held in 2022 (2023)

**Province:**
**District:**
**Educational Zone:**
Tel. No:

| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 | 09 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Serial No.** | **NIC No** | **Name of the student** | **Bank & Branch** | **Bank code** | **Branch code** | **Account number** | **Mobile Number (SMS )** | **Mobile Number** | **Address** |
| 01<br>02<br>03<br>04<br>05<br>.<br>.<br>.<br>.<br>.<br>50 | | | | | | | | | |

…………………………..
**Signature**
Date: **Zonal Education Director**

**<u>ආකෘති 02 පිරවීමේදී පහත සඳහන් උපදෙස් පිළිබඳව සැළකිළිමත් විය යුතුය.</u>**

1. ආකෘති පත්‍රය 02 **<u>ඉංග්‍රීසි භාෂාවෙන් පමණක්</u>** පුරවා එවිය යුතුය.

2. **<u>MS - Excel Sheet</u>** එකක් ආකාරයට තොරතුරු ඉදිරිපත් කළ යුතුය.

3. **<u>"Times New Roman"</u>** ආකාරයට **<u>අකුරු ප්‍රමාණය 11</u>** න් ඉහත ආකෘති පත්‍ර 02 සම්පූර්ණ කර එවිය යුතුය.

4. ශිෂ්‍යත්වලාභීන්ගේ නම් සඳහන් කර එවන තීරුව මුලකුරු සහිතව සඳහන් කළ යුතු අතර මුලකුරු අතර තිතක් නොතබා එක් හිස්තැනක් (Space 1ක්) පමණක් තැබිය යුතුය.

   **උදා- <u>A B C Senanayake</u>** √ **<u>A.B.C.Senanayake</u>** x

5. ශිෂ්‍යත්වලාභීන්ගේ දුරකථන අංකය සඳහන් කිරීමේදී සැම විටම පහත පරිදි නිවැරදිව සඳහන් කිරීම කළ යුතුය.

   **උදා-** 0771111111 - √
   077 1111111 - **x** 077 - 1111111 - **x**

6. සියළුම ශිෂ්‍යාධාරලාභීන් සඳහා ශිෂ්‍යත්ව මුදල් ගෙවීම් කිරීම සඳහා **<u>ලංකා බැංකුවේ හෝ මහජන බැංකුවේ ශිෂ්‍යයත්වලාභියාගේ නමට</u>** පවතින සක්‍රිය ගිණුමක ගිණුම් තොරතුරු පමණක් ලබාදිය යුතු අතර, එලෙස එම බැංකුවල ගිණුමක් නොමැතිනම් නව ගිණුමක් ආරම්භ කර එම ගිණුම් අංකය සඳහන් කර එවිය යුතුය.

7. තෝරාගත් ශිෂ්‍යත්වලාභීන්ගේ බැංකු ගිණුමේ සහ ජාතික හැඳුනුම්පතෙහි ඡායා පිටපතක් ලබාගැනීම කළ යුතු අතර. අදාළ ලේඛණ සමඟ එම ඡායා පිටපත් එවීමට කටයුතු කළ යුතුය.